**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்**
**முன்னிலை:-திரு.க.ஜெயக்குமார், பி.எல்.,எல்.எல்.எம்.,**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் நாள் புதன்கிழமை**
**இ.ம.எண்.01/2025**
**in**
**அ.வ.எண்.91/2023**

1.M.கவிதா
2.M.சுபா
3.M.உஷா
4.M.இந்துமதி

...மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1.மோகன்ராஜ்
2.உதவி மின் பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்
துலுக்கப்பட்டி,
R.R.நகர், விருதுநகர் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்.

இம்மனு 07.07.2025-ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.திருப்பதிராஜ், அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.S.சௌந்திரராஜன், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பாரதி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பு கட்சியை ருசு செய்யும் பொருட்டு வச்சக்காரப்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் அவர்களையோ

அல்லது அவருக்கு கீழ் பணியாற்றும் காவலரையோ குற்ற எண்.172/2022 வழக்கில் கண்ட AR copy, Doctor Final Opinion, Charge Sheet ஆகிய ஆவணங்களை கொண்டு வந்து சாட்சியமளிக்க அனுமதியளித்து உத்தரவிட வேண்டி கட்டளை 16 விதி 1 மற்றும் 2 CPC–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u>:–**

1ம் மனுதாரரின் கணவர் மின்சாரம் தாக்கி உயிரழந்ததற்கு இழப்பீடு கோரி தாவா அசல் மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தோட்டத்தில் சட்டத்திற்கு புறம்பாக அமைத்திருந்த மின்வேலியில் உள்ள மின்சாரம் தாக்கி 1ம் மனுதாரரின் கணவர் உயிரிழந்துள்ளது சம்மந்தமாக விருதுநகர் மாவட்டம் வச்சகாரப்பட்டி காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற எண்.172/2022 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மருத்துவர் Final Opinion வழங்கியுள்ளார். அதில் மனுதாரரின் கணவர் Electric Shock னால் தான் உயிரிழந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு Doctor Final Opinion, AR Copy, Charge Sheet மிகவும் முக்கியமான ஆவணமாகும். எனவே, வச்சக்காரப்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் அவர்களையோ, அவருக்கு கீழ் பணியாற்றும் காவலரையோ குற்ற எண்.172/2022 வழக்கின் Doctor Final Opinion, AR Copy, Charge Sheet ஆவணங்களை கொண்டு வந்து சாட்சியமளிக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3<u>) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. மனுதாரர்கள் பக்கம் மனுதாரர்களின் 1வது சாட்சியின் முதல்விசாரணை, குறுக்குவிசாரணை முடிந்த பின்பு தற்போது வழக்கில் கட்சி இல்லை என தெரிந்து கொண்டு வீண்

காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு மருத்துவர், காவல் ஆய்வாளர் போன்ற அரசு ஊழியர்களை ரிக்கார்டுகளுடன் இந்நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வேண்டுமென்றால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள சட்டப்பிரிவின் படி மனு தாக்கல் செய்ய முடியாது. CRP பிரிவு 75ன் படி தான் தாக்கல் செய்ய முடியும். மனுதாரர்களின் மனுவில் யாதொரு சட்டசாராம்சமோ, உண்மைத்தன்மையோ கிடையாது. மனுதாரர்கள் அவர்கள் கோரும் ஆவணங்களை குற்றவியல் நீதிமன்றத்தின் மூலம் சான்றிட்ட நகல்கள் கேட்டு பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றும், எனவே, மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி இந்த எதிர்மனுதாரரால் பிரார்த்திக்கப்படுகிறது.

4) இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இம்மனுவில் உபய தரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ இல்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

**<u>பிரச்சினைக்கான தீர்வு</u>:–**

7) அசல் வழக்கானது 1ம் மனுதாரரின் கணவர் மின்சாரம் தாக்கி உயிரழந்ததற்கு இழப்பீடு கோரி தாவா அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள் மீது மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரரின் கணவர் உயிரிழந்துள்ளது சம்மந்தமாக விருதுநகர் மாவட்டம் வச்சகாரப்பட்டி காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற எண்.172/2022ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் மேற்படி குற்ற வழக்கின் Doctor Final Opinion, AR Copy, Charge Sheet ஆவணங்கள் வழக்கின் மிகமுக்கிய ஆவணம் என்பதால், வச்சகாரப்பட்டி காவல்நிலைய ஆய்வாளரை மேற்படி ஆவணங்களை கொண்டு வந்து சாட்சியமளிக்க

உத்தரவிடவேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்ட அதேவேளையில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், இந்த மனுவை மனுதாரர்கள் உரிய சட்டப்பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கினை இழுத்தடிப்பதற்காக தற்போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டது. இருப்பினும், வழக்கின் சூழ்நிலையை கருத்தில்கொண்டும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்தில்கொண்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவினை தள்ளுபடி செய்வதற்கு ஆட்சேபணை செய்திருந்தாலும், வச்சக்காரப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.172/2022 ன்படியான வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கண்ட ஆவணங்களான Doctor Final Opinion, AR Copy, Charge Sheet ஆகியவை அசல் வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் என்ற நிலையில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு கோரியுள்ள மேற்படி ஆவணங்கள் வழக்கின் இறுதி தீர் முடிவிற்கு மிகமுக்கிய ஆவணம் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் இருதரப்பிற்கும் எவ்வித பாதகமும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதும் நிலையில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை விருதுநகர் மாவட்டம், வச்சகாரப்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் மூலம் வரவழைத்து அவர்களை இந்த வழக்கின் சாட்சியாக விசாரிக்க அனுமதியளித்து இப்பிரச்சனைக்கு அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

8) இறுதியாக, மனு அனுமதிக்கப்பட்டு, வச்சக்காரப்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் குற்ற எண்.172/2022 வழக்கில் கண்ட AR Copy, Doctor Final Opinion, Charge Sheet ஆகிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிப்பதற்கு அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**<u>உபயர தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை**

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
I.A.No.01/2025
in
O.S.No.91/2023
செவ்வை/வரைவு உத்தரவு
23.07.2025